# சீறத்துன்னபி ﷺ

## நாள் 22

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: ஜின்களின் ஒரு கூட்டம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது
- பகுதி 2: நபி (ஸல்) அவர்கள் மக்காவில் மீண்டும் நுழைதல்
- பகுதி 3: குர்ஆனில் அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ்
- பகுதி 4: அல் இஸ்ரா (இரவுப் பயணம்)
- பகுதி 5: நபிமார்கள் ஒன்று கூடும் மாபெரும் நிகழ்வு

## பகுதி 1: ஜின்களின் ஒரு கூட்டம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது

- தாயிஃபிலிருந்து திரும்பும் போது, மலைகளின் மலக்கான மலக்குல் ஜிபாலுடன் நடந்த சம்பவத்திற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்களும், ஜைது (ரலி) அவர்களும் மக்காவை நோக்கி பயணித்து, மக்காவின் புறநகர்ப் பகுதியான நக்லா பள்ளத்தாக்கில் முகாமிட்டனர்.

- இரவு நேரத்தில், நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழ எழுந்து குர்ஆனை ஓதத் தொடங்கினர்கள்.



- இங்கு நடந்த சம்பவம் அல்லாஹ்வால் குர்ஆனில் நேரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

- ‘‘(நபியே!) நாம் உம்மிடம் இந்தக் குர்ஆனைச் செவியுறும் பொருட்டு ஜின்களில் சிலரைத் திருப்பியதும், அவர்கள் அங்கு வந்தபோது, ‘‘மௌனமாக இருங்கள்’’ என்று மற்றவர்களுக்குச் சொன்னார்கள்;

- பிறகு, அது ஓதி முடிக்கப்பட்டபோது அச்சமூட்டி எச்சரிப்போராய்த் தம் இனத்தாரிடம் திரும்பிச் சென்றனர்’’. – ஸூரா அல்அஹ்காஃப் (46: 29)

- இது இஸ்லாத்திற்கு மாறிய ஜின்களின் முதல் கூட்டம்.

- மேலும் ஸூரா அல்அஹ்காஃபில் தொடர்கிறது: (ஜின்கள்) கூறினார்கள்:

''எங்களுடைய சமூகத்தார்களே! நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தைச் செவிமடுத்தோம், அது மூஸாவுக்குப் பின்னர் இறக்கப்பட்டிருக்கின்றது; அது தனக்கு முன்னுள்ள வேதங்களை உண்மைப்படுத்துகிறது. அது, உண்மையின் பக்கமும், நேரான மார்க்கத்தின்பாலும் (யாவருக்கும்) வழி காட்டுகின்றது.''

- எங்கள் சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளித்து, (அவர் கூறுவதை ஏற்று) அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்: (அதனால்) அவன் உங்கள் பாவங்களை விட்டும் உங்களை மன்னிப்பான்; நோவினைதரும் வேதனையிலிருந்தும் உங்களைப் பாதுகாப்பான். – ஸூரா அல்அஹ்காஃப் (46: 30-31)

- இங்கு அல்லாஹ் குறிப்பால் ஒரு செய்தியை தெரிவிக்கிறான். ''முழு மனிதகுலமும் உங்களை நிராகரித்திருந்தாலும் (தாயிஃப் சம்பவங்கள், மக்காவில் நடந்தவைகள்), மனிதகுலத்திற்கு அப்பாற்பட்ட உலகம் உங்களை ஏற்றுக்கொண்டுள்ளது'', என்ற உண்மையை அல்லாஹ் நமது நாயகம் கண்மணி ரசூல் (ஸல்) அவர்களுக்குக் காட்டுகிறான்.

## பகுதி 2: நபி (ஸல்) அவர்கள் மக்காவில் மீண்டும் நுழைதல்

- நபி (ஸல்) அவர்களும், ஜைது (ரலி) அவர்களும் மக்காவின் புறநகர்ப் பகுதியில் முகாமிட்டிருந்தபோது, ஜைது (ரலி) நபி (ஸல்) அவர்களிடம், ''நீங்கள் மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டதால், மீண்டும் மக்காவிற்குள் எப்படி நுழைவீர்கள்'' என்று கேட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு கிளம்பி, தாயிஃபுக்கு ரகசியமாக புறப்பட்டது, அங்கிருந்து வெளியேறி 10 நாட்கள் கழிந்துவிட்டது ஆகியன, அவர்கள் மக்காவில் உள்ள அனைத்து உறவுகளையும் துண்டித்துவிட்டதாக உறுதிப்படுத்தியதால் இந்தக் கேள்வி எழுந்தது.

- அவர்களது பெரிய தந்தை அபூலஹப் அவர்களது குடியினரின் பாதுகாப்பை விலக்கிக் கொண்டார்; தாயிஃப் பயணமும் பலனளிக்கவில்லை.

- நபி (ஸல்) அவர்கள் ஜைது (ரலி) அவர்களிடம், ''அல்லாஹ் நமக்கு ஒரு வழியை உருவாக்குவான்; அல்லாஹ் தன் நபிக்கு உதவி செய்வான்; அவனது செய்தியை மேன்மையாக்குவான்'' என்று கூறினார்கள்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் இரண்டு அல்லது மூன்று தூதர்களை குரைஷிகளின் சில கோத்திரங்களுக்கு அனுப்பத் தொடங்கினார்கள். அவர்கள் அனுதாபப்பட்டு தங்களது அழைப்புக்கு பதிலளிப்பார்கள் என்று நபி (ஸல்) நம்பினார்கள்.

- அவர்கள் தொடர்பு கொண்ட முதல் இரண்டு கோத்திரத்தினர் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க மறுத்துவிட்டனர்.

- நபி (ஸல்) அவர்கள் தூதரை அனுப்பிய மூன்றாவது நபர் முத்ஈம் இப்னு அதியி.

- இவர்தான் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு, ஊருக்கு வெளியே வாழ்ந்தபோது அதை முறியடிக்க உதவியவர்; அந்நேரத்தில் முஸ்லிம்களுக்கு ஒட்டகத்தில் பொருட்களை அனுப்பியவர்.

- உடனே முத்ஈம் தனது நான்கு மகன்களையும் தங்கள் கவசங்களை அணிந்துகொண்டு, ஆயுதங்களுடன் தயாராகுமாறு கட்டளையிடுகிறார்.



- பின்னர் தனது மகன்களை நபி (ஸல்) அவர்களிடம் சென்று, அவர்களை நான்கு புறங்களிலும் பாதுகாத்து, தன்னிடம் அழைத்து வரச் சொல்லி கட்டளை இடுகிறார்.

- பின்னர் நான்கு மகன்களும் முழுமையாக ஆயுதம் ஏந்தியபடி, நபி (ஸல்)

அவர்களை கஃபாவிற்கு அழைத்து வருகிறார்கள். அங்கு முத்ஈம் நபி (ஸல்) அவர்களை வரவேற்று அவர்களை தவாஃப் செய்யச் சொல்கிறார்.

- நபி (ஸல்) அவர்கள் தவாஃப் செய்யும்போது, அவரது நான்கு மகன்களும் ஆயுதம் ஏந்தியபடி பாதுகாப்பு அளித்தனர்.

- நபி (ஸல்) அவர்கள் தவாஃப் செய்து முடித்ததும், முத்ஈம் எழுந்து நின்று, ‘‘ஓ மக்காவின் மக்களே! நான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு என் பாதுகாப்பை அளிக்கிறேன்’’ என்று அறிவிக்கிறார்.

- மக்காவின் பெருமக்களில் ஒருவரான அபூசுஃப்யான் எழுந்து நின்று, ‘‘நீங்கள் அவரைப் பின்பற்றுபவரா அல்லது நீங்கள் அவருக்கு பாதுகாப்பு மட்டும்தான் அளிக்கிறீர்களா?’’ என்று கேட்டார்.

- அதற்கு முத்ஈம், ‘‘நான் இஸ்லாத்தை ஏற்கவில்லை. நான் பாதுகாப்பு மட்டுமே தருகிறேன்’’ என்று கூறினார்.

- அபூசுஃப்யான், ‘‘அப்படியானால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம்’’ என்றார்.

- இவ்வாறாக நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குத் திரும்புகிறார்கள். ஒரு இணைவைப்பாளர் அவர்கள் கோத்திரத்திற்கான பாதுகாப்பை வழங்குகிறார்.

- தாயிஃப் பயணம் பயனளிக்கவில்லை. அவர்களது பெரிய தந்தை அபுதாலிப் மற்றும் அவர்களது மனைவி கதீஜா (ரலி) சமீபத்தில் காலமானார்கள். அவரது மற்றொரு பெரிய தந்தை அபூலஹப் ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்கு மட்டுமே பாதுகாப்பு அளித்துவிட்டு, பின்பு அதை மறுத்து விட்டார். எனவே, நபி (ஸல்) அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோசமான நிலையைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

- பின்னர் அல்லாஹ் அவர்களுக்கு இந்த உலகில் அவர்கள் பெற்ற மிகப்பெரிய அருட்கொடைகளில் ஒன்றைக் கொடுத்தான். அதுதான் அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் சம்பவம்.

## பகுதி 3: குர்ஆனில் அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ்

- அபுதாலிப் அவர்களின் மரணம், கதீஜா (ரலி) அவர்களின் மரணம் மற்றும் தாயிஃப் சம்பவத்தைத் தொடர்ந்து, நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் பெறக்கூடிய மிகப்பெரிய அருட்கொடைகளில் ஒன்றை அல்லாஹ் அவர்களுக்குத் தயார் செய்திருந்தான்.

- அல்லாஹ் குர்ஆனில் ‘‘நிச்சயமாக, ஒவ்வொரு சிரமத்துடனும் நிவாரணம் உண்டு. நிச்சயமாக, ஒவ்வொரு சிரமத்துடனும் நிவாரணம் உண்டு’’ (ஸூரா அலம் நஷ்ரஹ்; 94: 5-6) என்று கூறுகிறான்.

- நபி (ஸல்) அவர்கள் அனுபவித்து வந்த அனைத்து கஷ்டங்களுக்கிடையில், அல்லாஹ் அவர்களுக்கு எந்தவொரு மனிதனுக்கும் வழங்கப்படாத மிகப்பெரிய பரிசை வழங்கினான்.

- அது அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் சம்பவமாகும்.

- அல் இஸ்ரா என்பது இரவில் நடந்த பயணத்தைக் குறிக்கிறது, இது குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது:


- தன்னுடைய அடியாரை (முஹம்மது நபி (ஸல்) ஓரிரவில் (கஃபாவாகிய) மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து (ஜெருசலேமில் உள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா வரை இரவுப் பயணம் செய்வித்த ஒருவன் (அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; (மஸ்ஜிதுல் அக்ஸாவாகிய) அது எத்தகையதென்றால், அதனைச் சுற்றியுள்ள பகுதியை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம்; நம்முடைய அத்தாட்சிகளை அவருக்கு நாம் காண்பிப்பதற்காக (அவ்வாறு அழைத்துச் சென்றோம்). (ஸூரா அல்இஸ்ரா 17:1)

- அல் மிஃராஜ் என்பது நபி (ஸல்) அவர்கள் வானத்திற்கு உயர்த்தப்படுவதை அல்லது அவர்களின் உடல் ரீதியான எழுச்சியைக் குறிக்கிறது. இது குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- (நபியுடைய) இதயம் அவர் கண்டதைப் பற்றிப் பொய்யுரைக்கவில்லை. ஆயினும், அவர் கண்டதை நீங்கள் எப்படி கேள்வி கேட்க முடியும்? (ஸூரா அந்நஜ்ம் 53: 11-12)

- அல்லாஹ் அதே ஸூராவில், நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை

அவர்களது அசல் வடிவத்தில் கண்டதையும், ஸித்ரத்துல் முன்தஹா (ஏழு வானங்களின் கடைசியில் உள்ள இலந்தை மரம்) மற்றும் ஜன்னத்துல் மஃவா (எனும் சொர்க்கம்) ஆகியவற்றைக் கண்டதைப் பற்றியும் கூறுகிறான். (ஸூரா அந்நஜ்ம் 53: 13-16).



- அல்லாஹ் இறுதியாகக் கூறுகிறான்: ''அவருடைய பார்வை விலகிச் செல்லவில்லை, அவை எல்லை மீறவில்லை. திடமாக, அவர் தம்முடைய இறைவனின் அத்தாட்சிகளில் மிகப்பெரியதைக் கண்டார்.'' (ஸூரா அந்நஜ்ம் 53: 17-18).

- இரண்டு ஸூராக்களும் அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் சம்பவத்தை ஒரே நோக்கத்திற்காகக் குறிப்பிடுகின்றன - அதாவது அல்லாஹ்வின் அற்புதமான அடையாளங்களை நபி (ஸல்) அவர்களுக்குக் காண்பிப்பது.

- எனவே அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் பயணம் முழுவதும் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட பரிசாகும்.

- அல் இஸ்ரா மற்றும் அல் மிஃராஜ் சம்பவம் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, மதீனாவில் குடிபெயர்வதற்கு ஒரு வருடம் முதல் 18 மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்தது.

- இந்த சம்பவம் இப்னு இஸ்ஹாக், ஸஹீஹ் புகாரீ மற்றும் முஸ்லிமில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் சம்பவத்தின் போது நடந்த சில நிகழ்வுகளின் தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி 4: அல் இஸ்ரா (இரவுப் பயணம்)

- நபி (ஸல்) அவர்கள் இரவில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஜிப்ரீல் (அலை) அங்கு வந்து, இரண்டு ரக்அத் தொழுவதற்காக அவர்களை ஹதீமுக்கு (கஃபாவுக்கு அடுத்த அரை வட்டப் பகுதி) அழைத்துச் சென்றார்கள்.

- நபி (ஸல்) கூறுவதாக ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ளது. ஜிப்ரீல் (அலை) தங்கத்தால் ஆன ஒரு கிண்ணத்தைக் கொண்டு வந்தார்கள்; அது ஜம்ஜம் தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது. ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களின் மார்பைத் திறந்தார்கள். பின்னர் அவர்களது இதயத்தை வெளியே எடுத்து, ஜம்ஜம் தண்ணீரால் கழுவி, மீண்டும் அதே இடத்தில வைத்து விட்டார்கள்.

- ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் இதயத்தைக் கழுவியது இது இரண்டாவது முறை, இருப்பினும் இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஒரு கரும்புள்ளியை அகற்ற வேண்டிய அவசியமில்லை.

- ஆயினும், வரவிருக்கும் மிகப்பெரிய நிகழ்வில் அவர்கள் பார்க்க இருக்கும் பிரமிக்க வைக்கும் காட்சிகளுக்காக தயார்படுத்தவே, ஜம்ஜம் நீரின் மூலம் இந்த இதயச் சுத்திகரிப்பு செய்ய வேண்டியதிருந்தது.

- நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ''பின்னர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வெள்ளை நிறத்தில் ஒரு விலங்கைக் கொண்டு வந்தார்கள். அது ஒரு கோவேறு கழுதையை விட சிறியதாகவும், கழுதையை விடப் பெரியதாகவும், தூய வெள்ளை நிறத்தில் இருந்தது. அதற்கு அல்-புராக் என்று பெயர்.''

- ஒரு புராக் குதித்தால் சாதாரணக் கண்ணால் பார்க்கக்கூடிய தூரத்தைக் கடக்க முடியும்.

- புராக்கில் ஒரு இருக்கை சேணமும், பாதுகாப்பு சேணமும் இருந்தது. ஜிப்ரீல் (அலை) அந்த பாதுகாப்பு சேணத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் புராக் மீது ஏறினார்கள்.

- நபி (ஸல்) ஏறியதும் புராக் குதித்தது. கவசத்தைப் பிடித்திருந்த ஜிப்ரீல் (அலை) அதை அடித்து, ''உனக்கு வெட்கமாக இல்லையா? ஏனென்றால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன்மீது தற்போதைய சவாரி செய்பவரை விட, அல்லாஹ்வின் பார்வையில் அருள் பெற்ற வேறு யாரும் உன் மீது

இதுவரை சவாரி செய்யவில்லை'' என்றார்கள்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஜெருசலேமிற்கு, பின்பு பைத்துல் முகத்தஸ் அல்லது மஸ்ஜிதுல் அக்ஸா (இஸ்லாத்தின் மூன்றாவது புனிதத் தலம்) பகுதிக்கு வரும் வரை புராக் மீது சவாரி செய்தார்கள்.



- அந்த நேரத்தில், ஜெருசலேம் ரோமானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸா பகுதியை குப்பை கொட்டும் இடமாக பயன்படுத்தி வந்தனர்.

- அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் வருகைக்காக மஸ்ஜிதுல் அக்ஸாவின் பழைய அமைப்பை மாற்றினான்.

- நபி (ஸல்) அவர்கள் புராக்கில் இருந்து இறங்கி, பின்னர் அதை முந்தைய நபிமார்கள் பயன்படுத்திய விலங்குக் கம்பத்தில் கட்டினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் உள்ளே சென்று இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள்.

## பகுதி 5: நபிமார்கள் ஒன்று கூடும் மாபெரும் நிகழ்வு

- தொழுகையை முடித்த பிறகு, நபி (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களையும் பார்த்தார்கள். மூஸா (அலை) அவர்களைப் பார்த்த நபி (ஸல்), அவர்களை

பழுப்பு நிறத்தில் வலிமையான, சதைப்பிடிப்பு கொண்ட மனிதர் என்று வர்ணிக்கிறார்கள்.

🌲 ஈஸா (அலை) அவர்களைப் பார்த்த நபி (ஸல்), அவர்கள் மூஸா (அலை) அவர்களைவிட குள்ளமாகவும், பழுப்பு நிறத்தில், பளபளப்பான மடிந்த கூந்தலுடன் இருந்ததாக வர்ணித்தார்கள். நபி (ஸல்) அவர்களைப் போலவே தோற்றமளிக்கும் இப்ராஹிம் (அலை) அவர்களைக் கண்டார்கள்.

🌲 நபி (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களையும், தூதர்களையும் தொழுகைக்கு வழிநடத்தினார்கள்.



🌲 அனைத்து நபிமார்களும் ஒரே வரிசையில் நின்றதாகக் கூறப்படுகிறது. அதாவது ஆதம் (அலை) முதல் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முந்தைய நபி (அதாவது ஈஸா (அலை)) வரை அனைத்து நபிமார்களும், தூதர்களும் ஒன்றாக நின்றார்கள். (அவர்கள் சுமார் 124,000 நபிமார்கள் மற்றும் தூதர்கள் என மதிப்பிடப்படுகிறது).

🌲 நமது நபி (ஸல்) அவர்கள் இமாமாக நின்றார்கள். அவர்கள் தொழுகையை நடத்தினார்கள்.

🌲 நபி (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களுக்கும் இமாமாக

இருந்திருக்கிறார்கள் என்பது இங்கே தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிகிறது. மேலும் ஒவ்வொரு நபியும் அதன் உம்மத்தின் தலைவராக இருப்பதால், நமது நபி (ஸல்) அவர்கள் எல்லா உம்மத்திற்கும் தலைவராக இருக்கிறார்கள்.

- ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளபடி – ‘‘நபி (ஸல்) ஆதமின் அனைத்து சந்ததியினருக்கும் சயீத் (தலைவர்)’’.

- தொழுகையை முடித்த பிறகு, ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இரண்டு பாத்திரங்களை வழங்குகிறார்கள் – ஒன்றில் மதுவும், மற்றொன்றில் பாலும் இருந்தது.

- ஜிப்ரீல் (அலை) அவர்கள், ‘‘உங்களுக்காகவும், உங்கள் உம்மத்திற்காகவும் ஒன்றை தேர்ந்தெடுங்கள்’’ என்று கூறுகிறார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் பாலை தேர்ந்தெடுத்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள், ‘‘நீங்கள் ஃபித்ராவை (தூயதை அல்லது சரியானதை) தேர்ந்தெடுத்துள்ளீர்கள்’’ என்று கூறினார்கள்.

- இதற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் வானங்கள் திறந்திருப்பதைக் கண்டதாகக் கூறுகிறார்கள். இங்கிருந்து அல் மிஃராஜ் (விண்ணேற்றம்) தொடங்கியது.